# பணமும் வங்கித்தொழிலும்

## பண நிரம்பல்


1988 இல் நாணய அபிவிருத்திகளில் காணப்பட்ட முக்கிய பண்பு முக்கியமாக உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான விரிவாக்கத்தின் விளைவாக பணநிரம்பலின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பேயாகும். 1987 இறுதியில் 18 சதவீதமாக விளங்கிய பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கிய குறுகிய பணநிரம்பலின் ($M_1$) ஆண்டு வளர்ச்சி வீதம் 1988 இறுதியில் 29 சதவீதத்திற்கு அதிகரித்தது. முழுமையான நியதியில் குறுகிய பணநிரம்பலானது முன்னைய ஆண்டின் ரூ. 39,040 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1988 இல் ரூ, 72,960 இலட்சத்தால் கணிசமாக அதிகரித்தது. இதேவேளை வர்த்தக வங்கிகள் வசமுள்ள பொதுமக்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் (போலி நாணயம்) 1987 இன் 12 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1988 இல் 7 சதவீத மெதுவான வீதத்தில் அதிகரித்தது. இதன் விளைவாக $M_1$ ஐயும் போலி நாணயத்தையும் உள்ளடக்கியதென வரைவிலக்கணப் படுத்தப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_2$) முன்னைய ஆண்டின் வளர்ச்சியான ரூ. 74,750 இலட்சம் அல்லது 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 96,110 இலட்சம் அல்லது 16 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

1988 இல் $M_1$ இல் காணப்பட்ட கணிசமான வளர்ச்சி முக்கியமாக ரூ. 49,920 இலட்சத்தால் அல்லது 37 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த பொதுமக்கள் வசமுள்ள நாணய உடமைகளைப் பிரதிபலித்தது. 1987 இல் இது தொடர்பான அதிகரிப்பு ரூ. 19,250 இலட்சம் அல்லது 17 சதவீதமாக இருந்தது. இதன் விளைவாக $M_1$ இல் நாணயக் கூறின் பங்கு 1987 இன் 54 சதவீதத்திலிருந்து 1988 இல் 57 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இது நாட்டில் தோன்றும் எதிர்பாராத உள்ளூர்க் குழப்பங்களினால் உருவாக்கப்படும் எதிர்பாரா அவசியத் தேவைகளை ஈடுசெய்வதற்காக திரவச் சொத்துக்களுக்கான பொதுமக்களின் விருப்பத்தினைப் பெருமளவு பிரதிபலித்தது. இதேவேளை, ரூ. 1,000, ரூ. 500 ஆகிய உயர்ந்த அளவுகளிலான நாணயங்களுக்கான பொதுமக்களின் கேள்வி தொடர்ந்து உயர்வாகக் காணப்பட்டதோடு இது தொடர்ந்துவரும் பணவீக்கத் தாக்கங்களின் பின்னணியில் கொடுக்கல் வாங்கல் நோக்கங்களுக்கு உயர் பெறுமதித் தாள்களின் அதிகரித்த பாவனையைப் பிரதிபலித்தது. இதன்படி, மொத்த நாணய வெளியீட்டில் இத் தாள்களின் பங்கு 1987 இறுதியில் 61 சதவீதத்திலிருந்து 1988 இறுதியில் 66 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

1988 இல் போலி நாணயம் ரூ. 23,150 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்தது. இது ரூ. 21,000 இலட்சத்தால் அல்லது 8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த ஏனைய தனியார் துறைக் கூறுகளின் தவணை சேமிப்பு வைப்புக்களில் பெருமளவுக்குப் பிரதிபலித்தது. ஒப்பிடுகையில், அரச கூட்டுத் தாபனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 2,420 இலட்சம் அல்லது 5 சதவீதமான சிறு அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதேவேளை கூட்டுறவு நிறுவனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் 1987 இன் ரூ. 680 இலட்ச அதிகரிப்புக்கு மாறாக ரூ. 270 இலட்சத்தால் சிறிதளவு வீழ்ச்சியுற்றன.

# பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.46

## நாணயக்கூட்டுக்கள் 1986—1988


தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 | 1988 | 1985 ஐ விட 1986 இல சதவீத மாற்றம் | 1986 ஐ விட 1987 இல் சதவீத மாற்றம் | 1987 ஐ விட 1988 இல சதவீத மாற்றம் | 1986 | 1987 | 1988 | 1985 ஐ விட 1986 இல சதவீத மாற்றம் | 1986 ஐ விட 1987 இல சதவீத மாற்றம் | 1987 ஐ விட 1988 இல சதவீத மாற்றம் |
| சனவரி ... | 18,456 | 21,845 | 25,336 | + 11.7 | + 18.4 | + 16.0 | 48,498 | 51,887 | 60,060 | + 10.4 | + 7.0 | + 15.8 |
| பெப்புருவரி ... | 19,062 | 21,738 | 25,672 | + 14.9 | + 14.0 | + 18.1 | 48,587 | 52,799 | 60,846 | + 8.3 | + 8.7 | + 15.2 |
| மாச்சு ... | 20,454 | 22,556 | 26,640 | + 18.7 | + 10.3 | + 18.1 | 49,410 | 53,855 | 61,081 | + 9.2 | + 9.0 | + 13.4 |
| எப்பிறல் ... | 20,287 | 22,121 | 27,467 | + 17.1 | + 9.0 | + 24.2 | 49,335 | 53,278 | 62,465 | + 7.2 | + 8.0 | + 17.2 |
| மே ... | 20,043 | 22,305 | 28,178 | + 16.5 | + 11.3 | + 26.3 | 49,119 | 53,972 | 63,687 | + 6.6 | + 9.9 | + 18.0 |
| யூன் ... | 19,949 | 22,075 | 27,792 | + 15.1 | + 10.7 | + 25.9 | 48,959 | 53,942 | 63,118 | + 5.9 | + 10.2 | + 17.0 |
| யூலை ... | 19,615 | 22,574 | 28,053 | + 15.6 | + 15.1 | + 24.3 | 48,882 | 54,624 | 63,645 | + 4.8 | + 11.7 | + 16.5 |
| ஓகத்து ... | 19,731 | 23,160 | 28,234 | + 14.5 | + 17.4 | + 21.9 | 48,771 | 55,236 | 64,116 | + 3.8 | + 13.3 | + 16.1 |
| செத்தெம்பர் ... | 20,399 | 22,973 | 28,453 | + 16.8 | + 12.6 | + 23.8 | 49,430 | 55,927 | 63,932 | + 3.2 | + 13.1 | + 14.3 |
| ஒற்றோபர் ... | 20,219 | 23,143 | 28,684 | + 13.8 | + 14.5 | + 23.9 | 49,868 | 56,560 | 64,371 | + 3.1 | + 13.4 | + 13.8 |
| நவெம்பர் ... | 20,293 | 23,551 | 30,379 | + 11.6 | + 16.1 | + 29.0 | 50,057 | 56,916 | 66,088 | + 6.0 | + 13.7 | + 16.1 |
| திசெம்பர் ... | 21,179 | 25,083 | 32,379 | + 12.9 | + 18.4 | + 29.1 | 50,860 | 58,335 | 67,946 | + 5.1 | + 14.7 | + 16.4 |
| மாதாந்த சராசரி ... | 19,974 | 22,760 | 28,106 | + 14.9 | + 14.0 | + 23.4 | 49,315 | 54,778 | 63,446 | + 6.1 | + 11.1 | + 15.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

1988 இல் நாணயக் கூட்டுக்களில் காணப்பட்ட அதிகளவு அதிகரிப்புக்குப் பொறுப்பான சாரணி உள்ளூர்க் கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 213,020 இலட்சம் அல்லது 28 சதவீதமான அதிகளவான வளர்ச்சியாகும். 1987 இல் ஒப்பிடத்தக்க வளர்ச்சி ரூ. 114,570 இலட்சம் அல்லது 18 சதவீதமாகும். 1988 இல் உள்நாட்டுக் கொடுகடன் வளர்ச்சி வங்கித் தொழில் முறையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 90,170 இலட்சம் அல்லது 33 சதவீதமான அதிகரிப்பையும் வர்த்தக வங்கிகளிலிருந்து தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனின் ரூ. 122,850 இலட்சம் அல்லது 25 சதவீதமான விரிவாக்கத்தையும் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டில் அரசிற்கான தேறிய கொடுகடனிலும் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனிலும் ஏற்பட்ட ஒப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் முறையே ரூ. 45,020 இலட்சம் அல்லது 20 சதவீதமாகவும், ரூ. 69,550 இலட்சம் அல்லது 17 சதவீதமாகவும் விளங்கின.

வளர்ந்துவரும் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையின் பின்னணியில் அரசு வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகளை நாடுதல் 1988 இல் கணிசமாக உயர்வடைந்தது. வங்கித்தொழில் முறையிலிருந்து அரசுக்கான மொத்தக் கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 39,000 இலட்ச அதிகரிப்புக்கு மாறாக 1988 இல் ரூ. 128,000 இலட்சத்தினால் உயர்வடைந்தது. இவ்வதிகரிப்பில், ரூ. 103,000 இலட்சம் அல்லது 80 சதவீதம் கொண்ட மிகக் கூடுதலான உதவுதொகைக்கு மத்திய வங்கி வகை கூறியது. திறமையான நாணய முகாமைத்துவம் பணவீக்கத் தாக்கங்களைக் தணித்தல் என்பனவற்றின் நோக்கில் இது கவலைக்கிடமான ஒரு அபிவிருத்தியாகும். அதிகளவு மோசமடையும் இறை நிலைமையின் விளைவாக வங்கித் தொழில் முறையிலிருந்து கடன்படவேண்டிய தேவையானது 1988 இன் இறுதி மாதங்களில் கூடியளவு காணப்பட்டது. ஒத்தோபர் இறுதிவரை வங்கித் துறையிலிருந்து அரசின் கடன்பாடுகள் சிறு தளம்பல்களுடன் மெதுவான வேகத்தில் அதிகரித்தன. ஆனால் இது ஆண்டின் இறுதி இரு மாதங்களிலும் கடுமையான வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1988 இன் முதல் பத்து மாத காலத்தில் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 37,580 இலட்சத்தால் அல்லது ரூ. 3,760 இலட்சம் கொண்ட மாதச் சராசரியால் உயர்வடைந்தது. எனினும் 1988 இன் இறுதி இரு மாதங்களில் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 52,590 இலட்சத்தால் அதிகளவால் உயர்வடைந்து நாணயக் கூட்டுக்களின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

1988 இல் அரசுடன் சேர்ந்து தனியார் துறையும் கூட வங்கிக் கொடுகடனில் அதிகரித்த பயன்பாட்டை நாடியது. முன்னைய ஆண்டின் ரூ 69,550 இலட்சம் அல்லது 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1988 இல் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் ரூ. 122,850 இலட்சத்தால் அல்லது 25 சதவீதத்தால் உயர்வடைந்தது. ரூ. 86,690 இலட்சம் அல்லது 71 சதவீதமாக விளங்கிய இவ்வதிகரிப்பின் பெரும்பங்கு ஏனைய தனியார் துறைத் தொகுதிக்கானவையாக விளங்கியது. இத்துறையால் பயன்படுத்தப்பட்ட கொடுகடன் முக்கியமாகக் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் வடிவங்களிலமைந்து முறையே ரூ. 33,470 இலட்சம், ரூ. 27,610 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. இதேவேளை, அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 26,270 இலட்சம் அல்லது 55 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 34,210 இலட்சத்தால் அல்லது 46 சதவீதத்தால் விரிவடைந்தது. இத்துறைக்கான கொடுகடனின் அதிகளவு உயர்வு ஒருபுறத்தில் அமைதியற்ற நிலைமைகள் காரணமாகச் சில முக்கிய கூட்டுத்தாபனங்களின்

## அட்டவணை 1.47

### நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்


| விடயம் | 1986 திசெம்பர் | 1987 திசெம்பர் | 1988 திசெம்பர் | மாற்றம் 1986/1987 தொகை | மாற்றம் 1986/1987 சதவீதம் | மாற்றம் 1987/1988 தொகை | மாற்றம் 1987/1988 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| **நாணயக்கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 11,570 | 13,495 | 18,487 | + 1,925 | + 16.6 | + 4,992 | + 37.0 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 9,609 | 11,588 | 13,892 | + 1,979 | + 20.6 | + 2,304 | + 19.9 |
| குறுகிய பண நிரம்பல் (M1) ... | 21,179 | 25,083 | 32,379 | + 3.904 | + 18.4 | + 7,296 | + 29.1 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 29,681 | 33,252 | 35,567 | + 3,571 | + 12.0 | + 2,315 | + 7.0 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 702 | 771 | 743 | + 69 | + 9.7 | — 27 | — 3.6 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,742 | 4,861 | 5,103 | + 119 | + 2.5 | + 242 | + 5.0 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) ... | 24,237 | 27,620 | 29,721 | + 3,383 | + 13.9 | + 2,100 | + 7.6 |
| **விரிந்த பணநிரம்பல் (M2)** ... | **50,860** | **58,335** | **67,946** | + **7,475** | + **14.7** | + **9,611** | + **16.4** |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 64,109 | 75,566 | 96,867 | + 11,457 | + 17.9 | + 21,302 | + 28.2 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 22,546 | 27,048 | 36,065 | + 4,502 | + 20.0 | + 9,017 | + 33.3 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 27,599 | 31,519 | 44,311 | + 3,920 | + 14.2 | + 12,792 | + 40.6 |
| மத்திய வங்கியால் ... | 24,846 | 26,157 | 36,439 | + 1,311 | + 5.3 | + 10,282 | + 39.3 |
| வர்த்தக வங்கிகளால் ... | 2,753 | 5,362 | 7,872 | + 2,609 | + 94.7 | + 2,510 | + 46.8 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 5,053 | — 4,471 | — 8,246 | + 582 | + 11.5 | — 3,775 | — 84.4 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 41,563 | 48,518 | 60,802 | + 6,955 | + 16.7 | + 12 285 | + 25.3 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,424 | 1,123 | 1,318 | — 301 | — 21.1 | + 195 | + 17.4 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,739 | 7,366 | 10,787 | + 2,627 | + 55.4 | + 3,421 | + 46.4 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 35,400 | 40,029 | 48,697 | + 4,629 | + 13.1 | + 8,669 | + 21.7 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 8,859 | 8,416 | 4,644 | — 443 | — 5.0 | — 3,772 | — 44.8 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | — 22,108 | — 25,647 | — 33,566 | — 3,539 | — 16.1 | — 7,919 | — 30.9 |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 15,332 | — 15,282 | — 14,693 | + 50 | | + 588 | |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 6,881 | — 10,413 | — 18,472 | — 3,532 | | — 8,059 | |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | 105 | 48 | — 400 | — 57 | | — 448 | |
| **விரிந்த பண நிரம்பல் (M2)** ... | **50,860** | **58,335** | **67,946** | + **7,475** | + **14.7** | + **9,611** | + **16.4** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: அடையாளங்கள் $M_2$ இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

## வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

தொழிற்பாடு மூலதனம் அதிகரித்தமையைப் பிரதிபலித்ததோடு மறுபுறத்தில் உயர்வடையும் செலவுகளைக் குறிப்பாக உயர்வடைந்த கூலிச் செலவுகளைப் பிரதி பலித்தது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் 1987 இன் ரூ. 3,010 இலட்சம் அல்லது 21 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1988 இல் ரூ. 1,950 இலட்சத் தால் அல்லது 17 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு நெல் கொள்வனவு களை நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட கொடுகடனில் முழுமையாகப் பிரதிபலித் தது. இத் தீர்ப்பனவுகள் ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளினால் காலதாமதமடைந்தன.

1988 இல், வெளிநாட்டுத் துறைத் தொழிற்பாடுகள் M2 இன்மீது ரூ. 37,720 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தினை உருவாக்கின. இது நாடு எதிர்நோக்கும் பாதகமான சென்மதி நிலுவை நிலைமையின் விளைவாக 1985 இலிருந்து அவதானிக்கப்பட்டு வரும் போக்கின் தொடர்ச்சியாகும். எனினும் 1988 இல் வங்கித் தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே இவ்வீழ்ச்சிகளில் அதிகூடியதாக விளங்கியதோடு 1988 இல் சென்மதி நிலுவை நிலைமை மோசமடையும் நிலைமையையும் பிரதிபலித்தது. 1988 இல் தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களின் வீழ்ச்சி மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் ரூ. 29,770 இலட்ச வீழ்ச்சி யினதும் வர்த்தக வங்கிகளினது ரூ. 7,950 இலட்ச வீழ்ச்சியினதும் கூட்டு விளைவாகும்.

### வர்த்தக வங்கித் தொழில்

1988 இல் வர்த்தக வங்கிகள் அவற்றின் திரவ நிலைமை தொடர்பாகக் கலந்துபட்ட தன்மையை அனுபவித்தன. ஆண்டின் தொடக்கப் பகுதியில் வங்கி ஊழியர்களின் சட்டப்படி வேலை இயக்கமும் மத்திய வங்கியின் ஒதுக்குத் தேவை யின் அதிகரிப்பும் ஆண்டின் இறுதிப் பகுதியில் நாட்டில் நிலவிய குழப்பங்களும் திரவத் தன்மையைக் குறிப்பாக இரண்டு அரச வங்கிகளினதும் திரவத்தன்மை யினைக் கடுமையாகப் பாதித்தன. இதேவேளை வைப்புக்களைத் திரட்டுவதில் ஏற் பட்டமுன்னேற்றம், திரவச் சொத்துக்களில் நிதியங்களை முதலீடு செய்வதன் மூலம் கடன் வழங்கும் பட்டியலைச் சீராக்கம் செய்தல் என்பனகாரணமாக சில வங்கிகள் திருப்திகரமான திரவ நிலைமையைப் பேணக்கூடியதாக இருந்தது. மறுபுறத் தில் வங்கிகளுக்கிடையான அழைப்புப் பணச் சந்தையில் நிலவிய உயர்ந்த வட்டி வீதங்கள் குறை நிலையிலுள்ள வங்கிகளின் பிரச்சினைகளைத் தீவிரப்படுத்தின. 1988 இன் இறுதிக் காலாண்டில் உள்ளூர்க் குழப்பங்கள் அதிகரித்ததன் விளை வாக ஏற்பட்ட திரவத் தன்மை பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான தற்காலிக வழி முறையாக வர்த்தக வங்கிகளுக்குச் சிறப்புக் கடன் வசதிகளை வழங்குவதற் காக மத்திய வங்கி திசெம்பரில் திட்டமொன்றை வகுத்தது.

இவ்வாண்டில், வங்கியிடை அழைப்புப் பணச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களின் அளவு கணிசமாக வீழ்ச்சியடைந்ததுடன் இது நிதிகள் அழைப்புப் பணச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்கள் சந்தைக்கு அசைவுற்றதையும் பிரதிபலித்தது. இதன்படி அழைப்புப் பணச் சந்தையில் வெளிநிற்கும் சராசரி மாதாந்தக்கடன் வழங்கல் நிலுவைகள் இவ்வாண்டில் ரூ. 1,430 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று 1988 இறுதியில் ரூ. 6,850 இலட்சத்தினை அடைந்தது. சந்தையில் நிதியங்களின் குறைவான நிரம்பல் வட்டி வீதங்கள் 1987 இல் ஆண்டுக்கு 5–21 சதவீத வீச்சிலிருந்து 1988 இல் ஆண்டுக்கு 6–30 சதவித வீச்சிற்கு அதிகரித்தமையில் பிரதிபலித்தது. 1988 இல் வர்த்தக வங்கிகள் தங்கள் குறுகிய கால நிதியங்களை முதலீடு செய்வதற்குக் கவர்ச்சிகரமான முதலீட்டு வழிமுறையை திறைசேரி உண்டியல்கள் வழங்கின. வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1987 இறுதியில் ரூ. 38,500 இலட்சத்திலிருந்து 1988 இறுதியில் ரூ. 48,570 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. வர்த்தக வங்கிகளால் வழங்கப் பட்ட வைப்புச் சான்றிதழ்களின் வெளிநிற்கும் பெறுமதி 1988 இல் ரூ. 3,670 இலட்சத்தால் கணிசமாக அதிகரித்து ஆண்டு முடிவில் ரூ. 23,990 இலட்சத்தை அடைந்தது. வைப்புச் சான்றிதழ் சந்தையில் மேலும் இரண்டு வங்கிகள்—செலான் இரஸ்ற் வங்கியும், இந்தியன் வங்கியும் சேர்ந்ததன் மூலம் இச் சந்தையில் தொழிற்படும் வங்கிகளின் மொத்த எண்ணிக்கையை 23 ஆக உயர்த்தின.

ஆய்விற்குரிய ஆண்டில் வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளங்கள் முன்னைய ஆண்டின் ரூ. 105,050 இலட்சம் அல்லது 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 189,890 இலட்சத்தால் அல்லது 25 சதவீதத்தால் உயர் வடைந்தன. 1988 இல் மூலவள வளர்ச்சியில் ரூ. 79,290 இலட்சம் அல்லது 42 சதவீதமான கணிசமான பங்கு, வைப்புக்களைத் திரட்டல் மூலம் பெறப்பட்டது. 1987 இன் ஒப்பிடத்தக்க அதிகரிப்பு ரூ. 64,410 இலட்சம் அல்லது 15 சத வீதமாகும். 1988 இல் வைப்புக்களின் வளர்ச்சியானது தவணை சேமிப்பு வைப்புக் கள் (நீண்ட தவணை வைப்புக்கள் உட்பட), கேள்வி வைப்புக்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட முறையே ரூ. 34,770 இலட்சம், ரூ. 44,520 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களை உள்ளடக்கியிருந்தது.

1988 இல் வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகள் ரூ. 1,780 இலட்சத்தால் சிறிதளவு உயர்வடைந்தன. இது வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களி லிருந்தான கடன்பாடுகளில் ஏற்பட்ட ரூ. 3,660 இலட்சம் கொண்ட வீழ்ச்சி யினால் எதிரீடு செய்யப்பட்ட மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகளில் ஏற் பட்ட ரூ. 4,270 இலட்சம் கொண்ட அதிகரிப்பை உள்ளடக்கியுள்ளது. இவ் வாண்டில் ஏனைய பொறுப்புக்கள், செலுத்தப்பட்ட மூலதனமும் ஒதுக்குகளும் என்பவற்றில் ஏற்பட்ட முறையே ரூ. 102,130 இலட்சம், ரூ. 8,200 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்புக்கள் வர்த்தக வங்கிகளின் மூலவள அடிப்படை யை உயர்த்துவதற்குப் பங்களித்தன.

அட்டவணை 1.48 வர்த்தக வங்கிகளின் மூலவளங்களையும் அவற்றின் பயன் பாட்டையும் தேறிய அடிப்படையில் தருகின்றது. 1988 இல் ''ஏனைய தனியார் துறை'' ரூ. 41,980 இலட்சம் கொண்ட தொகையினைப் பயன்படுத்தி வர்த்தக வங்கி மூலவளங்களின் முதன்மைப் பயன்பாட்டாளராக விளங்கியது. இது வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 44,700 இலட்சம் கொண்ட அதிகரிப்பினதும் முற்பணங்களிலும் முதலீடுகளிலும் ஏற்பட்ட ரூ. 86,680 இலட்ச வளர்ச்சியினதும் ஒன்று சேர்ந்த விளைவாகும். இதேவேளை அரச கூட்டுத்தாபனங்கள் ரூ. 31,830 இலட்சம் கொண்ட வர்த்தக வங்கி மூலவளங்களைப் பயன்படுத்தின.

*அட்டவணை 1.48*

**வர்த்தக வங்கிகளின் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் மூலவளங்கள் அவற்றின் பயன்பாடு என்பனவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள்**
*(தேறிய அடிப்படையில்)*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| துறை | 1986 /1987 முடிவில் | 1987/1988(அ) முடிவில் |
|---|---|---|
| 1 அரசு ... ... ... | — 3,034.7 | — 700.4 |
| 2. மத்திய வங்கி ... ... ... | 2,970.7 | — 647.2 |
| 3. அரச கூட்டுத்தாபனங்கள் ... ... ... | — 1,652.0 | — 3,183.3 |
| 4. கூட்டுறவு நிறுவனங்கள் ... ... ... | 472.5 | — 130.2 |
| 5. ஏனைய தனியார் ... ... ... | — 68.1 | — 4,198.3 |
| 6. வங்கிகளுக்கிடையில் ... ... ... | 1.1 | 72.2 |
| 7 வெளிநாட்டு ... ... ... | — 178.1 | 794.7 |
| 8. பல்வகை விடயங்கள் ... ... ... | 1,488.6 | 7,992.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: கழித்தல் அடையாளம் மூலவளங்களின் தேறிய பயன்பாட்டினைக் குறிக்கின்றது.

(அ) வங்கித்தொழில்முறையின் வழமையான தொழிற்பாட்டினைப் பாதித்த 1988 இன் இறுதிக் காலாண்டில் இடம்பெற்ற அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக 1988 ஆம் ஆண்டின் தரவுகள் கடுமையான ஒழுங்கீனங்களுக்கு உட்பட்டுள்ளது. இதன்விளைவாக பல்வகைவிடயங்களின் வகையில் உயர்ந்த பெறுமதி காணப்படுகிறது.

1988 இல் வங்கிகளுக்கிடையான துறையிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கான மூலவளங்களின் தேறிய நிலுவை ரூ. 720 இலட்சமாகக் காணப்பட்டது. இதே வேளை, வர்த்தக வங்கிகளின் தேறிய மூலவள வளர்ச்சிக்கு வெளிநாட்டுத்துறை ரூ. 7,950 இலட்சமளவில் பங்களித்தது. இது கடன்பாடுகள் (ரூ. 1,170 இலட்சம்), வைப்புக்கள் (ரூ. 12,880 இலட்சம்) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களைக் கொண்டுள்ளதுடன் ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட (ரூ. 6,100 இலட்சம்) வெளிநாட்டு நிலுவைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஓரளவுக்கு எதிரீடு செய்யப்பட்டது.

1988 இல் வாடிக்கையாளர் பணிகளின் ஆற்றலை முன்னேற்றுவதற்கு வர்த்தக வங்கிகள் மேலும் நடவடிக்கைகள் எடுத்தன. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வங்கித் தொழில் நேரங்களை அதிகரித்தல், வங்கித்தொழில் தொழிற்பாடுகளை கணனிமயப்படுத்தல், மனிதவலு அபிவிருத்தியையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் தீவிரப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இரு அரச வங்கிகள் கிராமிய துறையிலுள்ள சிறிய கடன்படுநர்களுக்கு முகவர்கள் மூலம் கூடிய கொடுகடனைப் பகிர்ந்தளிப்பதற்கு முகவர் வங்கித்தொழில் திட்டத்தைத் தொடங்கின.

1988 யூலேயில் செலான் இரஸ்ட் வங்கியால் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டதோடு இலங்கையில் தொழிற்படும் வெளி நாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 24 ஆக உயர்ந்தது. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்கள் இவ்வாண்டில் ஐ.அ. டொலர் 90 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று 1988 இறுதியில் ஐ.அ. டொலர் 6,540 இலட்சமாக விளங்கியது. 1988 இல் வதிவற்றோர் வகையில் முக்கியமாக வெளிநாட்டு வங்கிகளுக்கு வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவு அதன் கடன் வழங்கலை ஐ.அ. டொலர் 400 இலட்சத்தால் அதிகரித்தது. ஏனினும் வதிவோர் வகைக்கான வெளிநிற்கும் கடன் வழங்கல் ஐ.அ. டொலர் 810 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தவேளை, கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுத் தொழில் முயற்சிகள் அவற்றின் கடன்பாடுகளை ஐ.அ. டொலர் 20 இலட்சத்தால் அதிகரித்ததுடன் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவிற்கு வெளியிலுள்ள ஒப்பு தலளிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் அவற்றின் கடன்பாடுகளை ஐ.அ. டொலர் 330 இலட்சத்தால் குறைத்துக் கொண்டன. வதியும், வதிவற்ற வகைகள் இரண் டும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளுடனன அவற்றின் வைப்புக் களில் முறையே ஐ.அ. டொலர் 370 இலட்சம், ஐ.அ. டொலர் 40 இலட்சம் கொண்ட வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. இவ்வாண்டில் வதிவற்ற வெளிநாட்டு வங்கிகள் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் நிதியங்களின் மிகப் பெரிய தேறிய பயன்பாட்டாளராக அதாவது ஐ.அ. டொலர் 360 இலட்சத் தினைக் கொண்டிருந்தன.

**வங்கி விரிவாக்கம்**

புதிதாகக் கூட்டிணைக்கப்பட்ட உள்நாட்டு வங்கியான வரையறுக்கப்பட்ட சேலான் இரஸ்ட் வங்கி 1988 மாச்சில் கொழும்பில் தொழிற்பாடுகளைத் தொடங் கியது. இத்துடன் இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளதுடன் உள்நாட்டு வங்கிகள் 6 ஆக அதிகரித்தன.

1988இல் இலங்கை வங்கி கிளை ஒழுங்கமைக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தொடங்கியது. அது கெப்பிட்டிபொல கிளையை வெலிமடையில் மீளமைப்புச் செய்தது. கொழும்பு மத்திய வீதியிலுள்ள கிளை கொழும்பு மத்திய பெருஞ் சந்தைக் கிளையுடனும், கினிகத்தேனையிலுள்ள கிளை நாவலப்பிட்டியிலுள்ள கிளை யுடனும் இணைக்கப்பட்டன. இது மேலும் மாவத்தகம, வத்தேகம ஆகிய இடங் களிலுள்ள வேளாண்மைப் பணிநிலையக் கிளைகளை ''சி'' தரத்திலுள்ள முதன்மைக் கிளைகளாகத் தரமுயர்த்தியதுடன் பஸ்கொடவிலுள்ள வேளாண்மைப் பணி நிலை யக் கிளையை கம்புறுப்பிட்டியாவில் மீளமைவு செய்தது. இலங்கை வங்கி தெரனிய கல, பொரலை, கேகாலை பெரியகடை, கல்கமுவ, தங்காலை ஆகிய இடங்களிலுள்ள அதன் கிளைகளை ஒப்பீட்டு ரீதியாகக் கூடிய நன்மையளிக்கத்தக்க வியாபார இடங்களுக்கு மாற்றியது. இம்மாற்றங்களைத் தொடர்ந்து 1988 இறுதியில் இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 239 ஆக மாறுதிருந்த வேளையில் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் 47 ஆக வீழ்ச்சி யடைந்தன. இலங்கை வர்த்தக வங்கி மகரகமவில் கிளையொன்றினைத் தொடங்கி அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 16 ஆக உயர்த்தியது. 1987 இல் தொழிற்படத் தொடங்கிய சம்பத் வங்கி புறக்கோட்டை, நுகேகொடை, பொரலை ஆகிய இடங்களில் மூன்று கிளைகளைத் திறந்து 1988 இறுதியில் அதன் கிளையமைப்பை 4 ஆக உயர்த்தியது. இதேவேளை, மக்கள் வங்கியினதும் ஏனைய வெளிநாட்டு வங்கிகளினதும் கிளையமைப்பு முறையே 298 ஆகவும், 22 ஆகவும்

மாறுதிருந்தது. இதன்படி மீளமைவு செய்யப்பட்ட வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் நீங்கலாக வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1988 இறுதியில் 700 ஆக விளங்கியது. இதேவேளை ஹொறணையிலும், நாரகேன்பிட்டியிலும் இரண்டு கிளைகளைத் தேசிய சேமிப்பு வங்கி திறந்து ஆண்டு முடிவில் நாட்டில் 64 தொழிற்படும் கிளைகளைக் கொண்டிருந்தது.

1988 இல் நுவரெலியா, மொனராகலை மாவட்டங்களில் புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தொடங்கப்பட்டதோடு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 11 ஆக உயர்ந்தது. இவ்வாண்டில் அநுராதபுரத்திலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நீங்கலாக மற்றைய எல்லாப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் அவற்றுக்கான மாவட்டங்களில் கிளைகளைத் திறந்தன. இதனால் ஆண்டு முடிவில் நாட்டில் தலைமை அலுவலகங்கள் உட்பட 80 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகள் காணப்பட்டன.

அட்டவணை 1.49

**வங்கிக் கிளைகளின் பரம்பல்**

| வகை | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை ... | 28 | 33 | 36 |
| 1. 1. வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை ... | 23 | 24 | 25 |
| 1. 1. 1. உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 04 | 05 | 06 |
| 1. 1. 2. வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 19 | 19 | 19 |
| 1. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை (அ) ... | 05 | 09 | 11 |
| 2. கிளைகளின் எண்ணிக்கை* ... | 791 | 823 | 844 |
| 2. 1. வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 699 | 699 | 700 |
| 2. 1. 1. உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஆ) ... | 676 | 677 | 678 |
| 2. 1. 1. 1. வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை ... | 52 | 49 | 47 |
| 2. 1. 2. வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 23 | 22 | 22 |
| 2. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை ... | 32 | 61 | 80 |
| 2. 3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 60 | 62 | 64 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அ. 1985இன் எண் 15 கொண்ட பி. கி. அ. வ. சட்டத்தின்கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

ஆ. முதன்மைக் கிளைகளின் விரிவாக்க அலுவலகங்களாகத் தொழிற்படுகின்ற வேளாண்மைப்பணி நிலையங்கள் தவிர்ந்த விரிவாக்க அலுவலகங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வெளிநாட்டிலுள்ள கிளைகள் என்பவற்றை உள்ளடக்கும்.

* தலைமை அலுவலகங்கள் உட்பட

**முகவர் வங்கித் தொழில்**

இலங்கையில் ''முகவர் வங்கித் தொழிலின்'' முன்னேற்றத்துக்கான முன்னோடியான இரு அரச வங்கிகள்—இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் ஒரு திட்டத்தை 1988 ஒத்தோபரிலிருந்து நடைமுறைப்படுத்தின. இதன் மூலம் எளிதான இலகுவான நியதிகளில் கடன்படுநர்களுக்குச் சிறிய கடன்களை வழங்குவதற்குக் கிராமிய பணவழங்குநர்களின் பணிகள் நாடப்பட்டன. குறைந்தளவிலான ஆவணங்களுடன் முறைசாரா பணச் சந்தைகளில் நிலவும் வட்டி வீதங்களைவிடச் சார்பு ரீதியில் குறைந்த வட்டிகளை விதிப்பதன் மூலம் இத்திட்டம் கடன்படுநர்களின் மீதான சுமையைக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முகவர்களை நியமிப்பதற்கும் எதிர்கால சிறிய கடன்படுநர்களுக்கு மீள் கடன் வழங்குவதற்கான கடன்களை வழங்குவதற்கும் இரு அரச வங்கிகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும், வங்கிகளின் பெயரில் வைப்புக்களைத் திரட்டுவதற்கு முகவர்கள் எதிர்பார்க்கப்படவில்லை. முகவர்களுக்கு வங்கிகளால் ஆண்டுக்கு 18 சதவீதத்தில் கடன்கள் வழங்கப்படுகின்றன. முகவர்கள் இப்பணத்தை ஆண்டுக்கு 30 சதவீத வட்டியில் மீளக் கடனாக வழங்குவர். கடன்படுநர் ஒருவருக்கான அதிகூடிய கடனின் அளவு ரூ. 5,000 ஆகவும் அதிகூடிய முதிர்ச்சிக்காலம் ஏழு ஆண்டாகவும் இருக்கும். மீள் கொடுப்பனவுகள் நாள்தோறும், வாராந்தம், மாதாந்தம் அல்லது அரையாண்டுதோறும் செய்யப்படலாம்.

இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை, கைத்தொழில் (சிறிய அளவு), வர்த்தகம் நுகர்வு, பொருட்கள் கொள்வனவு மற்றும் ஏனைய பல்வகை நோக்கங்களுக்காக கடன்கள் பெறப்படலாம். 1988 இறுதியில் இலங்கை வங்கியால் 100 முகவர்களும், மக்கள் வங்கியால் 65 முகவர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.


**வட்டி வீதங்கள்**

1988 இல் அதிகரிக்கும் பணவீக்கத் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கையின் வட்டிவீத அமைப்பில் பொதுவாக மேல்நோக்கிய போக்கு காணப்பட்டது. வட்டி வீதத்தில் ஏற்பட்ட இவ்வுயர்ந்த வட்டிவீத நிர்ணயம் பெருமளவுக்குச் சந்தை விசைகளினால் பெருமளவிற்குச் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாகவுள்ள சந்தைகளில் மிகவும் அதிகமாக விளங்கியது.

முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் வட்டி வீதங்கள் கூடியளவில் சந்தையில் தீர்மானிக்கப்படுவதாக விளங்கி வருவதோடு அதிகார பீடங்களின் தலையீடு மிகச் சிறிதாக மட்டுமே உள்ளது. நிதியங்களுக்கான அரசின் கேள்வி கணிசமாக அதிகரித்துள்ளமையை முக்கியமாகப் பிரதிபலிக்கும் வகையில் இச்சந்தையின் வட்டி வீதங்கள் குறிப்பாக 1988 இன் இறுதி நான்கு மாதங்களிலும் குறிப்பிடத்தக்களவுக்கு உயர்ந்த மட்டங்களுக்கு அதிகரித்தன. திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட ஆண்டுச் சராசரி வருவாய் 1987 இறுதியின் 10.77 சதவீதத்திலிருந்து 1988 இறுதியில் 18.86 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. முதலாந்தர திறைசேரி உண்டியல்கள் சந்தையின் அபிவிருத்திகளைத்தொடர்ந்து இரண்டாந்தர திறைசேரி உண்டியல்களின் சந்தையில் வட்டி வீதங்களும் ஓரளவுக்கு ஒத்த மாற்றங்களுக்கு உட்பட்டன. 1987 இறுதியில் ஆண்டுக்கு முறையே 7.26 சதவீதமாகவும், 11.26 சதவீதமாகவும் விளங்கிய இரண்டாந்தர திறைசேரி உண்டியல்கள் மீதான கழிவு வீதமும் மீள் கழிவு வீதமும் 1988 இறுதியில் ஆண்டுக்கு 18 சதவீதமாகவும், 23 சதவீதமாகவும் உயர்வடைந்தன. இதேவேளை சந்தை அபிவிருத்திகளுடன் இசைவாக மத்திய வங்கிப் பிணைகள்

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்



மீதான நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதம் செத்தெம்பரில் 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கும் இப்பிணைகள் மீதான வருவாய் முன்னைய வழங்கல்களுக்குப் பொருத்தமான ஆண்டுக்கு 12.19 சதவீத 14.0 சதவீத வீச்சிலிருந்து செத்தெம்பரில் நடைபெற்ற இறுதி ஏலத்தில் ஆண்டுக்கு 16.2 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன.

ஏனைய துணைச் சந்தைகளில் நிலவும் உயர்ந்த மட்ட வட்டி வீதங்களின் தாக்கத்தையும், வர்த்தக வங்கித் தொழில் முறையினுள் குறுகியகால நிதியங்களுக்கான அதிகரித்த கேள்வியையும் பிரதிபலிக்கும் வகையில் வங்கிகளுக்கிடையான அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்கள் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்தன. இச் சந்தையின் வட்டி வீதங்கள் 1987 இறுதியில் ஆண்டுக்கு 11–14 சதவீத வீச்சிலிருந்து 1988 இறுதியில் ஆண்டுக்கு 16–21 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்தன.

இவ்வாண்டில் வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்பு வீதங்களில் பல திருத்தங்களை மேற்கொண்டன. 1988 இன் முதல் காலாண்டில் ஆண்டுக்கு 8.5 சதவீதத்திற்கும், 14.0 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலிருந்து ஆண்டுக்கு 8.5 சதவீதத்திற்கும், 13.5 சதவீதத்திற்குமிடையிலான வீச்சிற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த ஒரு ஆண்டு வைப்புக்கள் மீதான அதிகூடிய, அதிகுறைந்த வீதங்கள் நவெம்பரில் ஆண்டுக்கு 9.0 சதவீதத்திற்கும், 15.0 சதவீதத்திற்குமிடையிலான வீச்சிற்கு உயர்வடைந்தன. இவ்வீதங்கள் 1988 திசெம்பரில் ஆண்டுக்கு 9.0 சதவீதத்திற்கும், 15.5 சதவீதத்திற்குமிடையிலான வீச்சிற்கு மேலும் உயர்வடைந்தன. இதேவேளை, வைப்புச் சான்றிதழ்கள் மீது வங்கிகளால் வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் 1987 இறுதியில் ஆண்டுக்கு 7.0 சதவீதத்திற்கும், 13.0 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலிருந்து 1988 இறுதியில் ஆண்டுக்கு 8.0 சதவீதத்திற்கும், 14.9 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிற்கு உயர்வடைந்தன. இவ்வாண்டில் நிதிக் கூட்டு நிலையங்கள் வைப்புச் சான்றிதழ்கள் மீது வழங்கிய வட்டி வீதங்கள் ஆண்டுக்கு 8.0 சதவீதத்திற்கும், 18.0 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலிருந்து ஆண்டுக்கு 10.0 சதவீதத்திற்கும், 18.0 வீதத்திற்கும் இடையிலான வீச்சிற்கு உயர்ந்து சிறு அதிகரிப்பைப் பதிவு செய்தன.

அண்மைய கடந்த காலத்தில் சில நிதிக் கூட்டு நிலையங்களில் நிலவிய பாதகமான அபிவிருத்திகள் காரணமாக, 1988 இல் நிதிக்கூட்டு நிலையங்களின் வைப்பு வீதங்கள் மத்திய வங்கியாலேயே தொடர்ந்தும் ஒழுங்காக்கப்படுகின்றன. 1979 இன் எண் 27 கொண்ட நிதிக்கூட்டு நிலையங்களின் கட்டுப்பாட்டுச் சட்டம் 1988 யூன் 10 இல் வெளியிடப்பட்ட பணிப்புரையின் நியதிகளின்படி 12 மாத வைப்புக்கள்மீது கொடுக்கப்படத்தக்க அதிகூடிய வீதம் ஆண்டுக்கு 17 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்தப்பட்டது. கழிவில் வழங்கப்பட்ட கருவிகளின்மீது அனுமதிக்கத்தக்க அதிகூடிய கழிவு வீதம் ஆண்டுக்கு 16.7 சதவீதத்தை விஞ்சக்கூடாதெனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வெல்லைகள், 1988 ஓகத்து 8 இல் மீண்டும் உயர்த்தப்பட்டு 24 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சிக் காலத்தின் பின்னர் மீளக் கொடுக்கப்படத்தக்க வைப்புக்கள் மீது வழங்கப்படத்தக்க அதிகூடிய வட்டி வீதம் ஆண்டுக்கு 21 சதவீதமான தனி வட்டியாகவும், கூடிய முதிர்ச்சிக் காலத்தையுடைய வைப்புக்கள்மீது 24 சதவீதமாகவும் குறிக்கப்பட்டுள்ளது. முதிர்ச்சிக் காலத்தில் மீட்கப்படக் கூடிய பெறுமதியைவிடக் குறைவான விலையுடைய பிணைகள், ஏனைய கருவிகள் மீதான கழிவு வீதங்களுக்கும் அதே அதியுயர் வீதங்கள் பொருத்தமானவையாகும்.

வர்த்தக வங்கிகளின் நிறைவேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தை மத்திய வங்கி தொடர்ந்தும் வாராந்த அடிப்படையில் வெளியிட்டு வந்தது. ஏனைய வட்டி வீதங்களில் அவதானிக்கப்பட்ட போக்கினைப்போன்று நிறைவேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் உயர்வடையும் போக்கினைக் கொண்டிருந்து, வர்த்தக வங்கிகளின் நிதியங்களின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பையும் குறுகிய கால நிதியங்களுக்கான அதிகரித்த கேள்வியையும் எடுத்துக் காட்டின. நிறைவேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் முன்னைய ஆண்டின் ஆண்டுக்கு 13.5 சதவீதத்திற்கும், 15.1 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சுடன் ஒப்பிடுகையில் 1988 இல் ஆண்டுக்கு 12.9 சதவீதத்திற்கும் 17.2 சதவீதத்திற்குமிடையிலான வீச்சில் தளம்பலுற்றது.

இவ்வாண்டில் நடுத்தர, நீண்டகாலக் கடன் வழங்கல் வீதங்களிலும் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன. ரூபாப் பிணைகள் சந்தையில் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ஆண்டுக்கு 11 சதவீத வட்டி வீதத்தையும் 6 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தையும் கொண்ட தொடர்களுக்குப் பதிலாக ஒன்று ஆண்டுக்கு 12 சதவீத வட்டியையும் 6—8 ஆண்டுகள் முதிர்ச்சிக்காலத்தையும், மற்றையது ஆண்டுக்கு 14 சதவீத வட்டியையும் 2 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தையும் கொண்ட இரு அரச பிணைத் தொடர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. நடுத்தரகால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் குறுகிய காலத்தைவிடக் குறைவானதாக உணரப்பட்டமையால் உயர்ந்த வட்டி வீதங்களைக் கொண்ட பிணைகளுக்குக் குறைவான முதிர்ச்சிக்காலம் நிர்ணயிக்கப்பட்டது.

நீண்டகாலக் கடன் வழங்கல் நிறுவனங்களில், தேசிய அபிவிருத்தி வங்கி அதன் வட்டி வீதங்களைச் சந்தை வீதங்களுடன் தொடர்புள்ளதாக்குவதற்கு முக்கிய மாற்றங்களைச் செய்தது. உதாரணமாக 1988 நடுப்பகுதியில் செயற்பாட்டுக்குவந்த சிறிய நடுத்தரக் கைத்தொழில்கள் செயற்றிட்டம் 111 இன் கீழ் மாறத்தக்க மீள் நிதியிடல் வீதமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னைய ஆறு மாதங்களுக்கான சராசரி நிறைவேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்திலிருந்து 6 சதவீதப் புள்ளிகளைக் கழிப்பதன் மூலம் ஆறு மாத காலத்திற்கு செயற்படும் மீள் நிதியிடல் வீதத்தைப் பெறுவதே இவ்வொழுங்காகும். எனினும், மீள் கடன் வழங்கல் வீதமானது குறிப்பிடப்படாதிருப்பதால் இது கடன் வழங்கும் நிறுவனங்கள் அவற்றின் தொழிற்பாட்டுச் செலவுகளினதும், செயற்றிட்ட இடர்ப்பாடுகளினதும் அடிப்படையில் தமது சொந்த இலாபங்களைத் தீர்மானிப்பதற்கு சுதந்திரத்தை வழங்குகின்றது. செயற்றிட்டங்களுக்கான நேரடிக் கடன் வழங்கல்களைப் பொறுத்தளவில் சராசரி நிறைவேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்துடன் இணைக்கப்பட்ட நிலையான, மாறும் வீதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கடன்படுநர்கள் மாறும் அல்லது நிலையான வட்டி வீதங்களைத் தெரிவு செய்வதற்கு விருப்புரிமையளிக்கப்பட்டனர். இதேவேளை கருவிகளுக்கு நிதியிடல், வர்த்தகக் கட்டடங்களின் கட்டுமானம், தொழிற்படு மூலதனமும், குறைநிரப்பு நிதியிடல் போன்றவற்றிற்கு பொருத்தமான கடன் வழங்கல் வீதங்கள் 1988 சனவரி ஒன்றிலிருந்து அதிகரிக்கப்பட்டன. இதன்படி இவ்வகைகள் தொடர்பான கடன் வழங்கல் வீதங்கள் 1987 இறுதியில் ஆண்டுக்கு 14 சதவீத மட்டத்திலிருந்து 1988 இல் ஆண்டிற்கு 15 சதவீதத்திற்கும், 18 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிற்கு அதிகரித்துள்ளன. இவ்வாண்டில் ஏனைய நீண்டகால கடன்வழங்கல் நிறுவனங்களின் கடன்வழங்கல் வீதங்கள் ஏறத்தாழ மாறாதிருந்தன.

DISCARDED

**மத்திய வங்கித் தொழில்**

மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1987 இன் ரூ. 22,800 இலட்சம் (5 சதவீதம்) கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 98,880 இலட்சம் (22 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்து 1988 இறுதியில் ரூ. 553,320 இலட்சமாக விளங்கின.

சொத்துக்கள் பக்கத்தில், மத்திய வங்கியின் பன்னுட்டு ஒதுக்கு (மொத்தம்) நான்காவது ஆண்டாகத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் பிணை களிலும் திறைசேரி உண்டியல்களிலுமான முதலீடுகளில் ஏற்பட்ட ரூ. 7,010 இலட்சம் கொண்ட வீழ்ச்சியே 1988 இல் பன்னுட்டு ஒதுக்கு ரூ. 12,230 இலட் சத்தால் (14 சதவீதம்) வீழ்ச்சியடைந்தமைக்கு முதன்மைக் காரணமாகும். மேலும் வெளிநாட்டிலுள்ள காசும், நிலுவைகளும் ரூ. 5,220 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன.

முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட போக்கைத் தொடர் ந்து மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் (ஏனைய சொத்துக்கள், கணக்கு கள் நீங்கலாக) ரூ. 106,590 இலட்சத்தால் (36 சதவீதம்) அதிகளவில் அதிகரித் தன. இவ்வதிகரிப்பு உள்நாட்டுச் சொத்துக்களின் எல்லா முதன்மை வகைகளிலும் பிரதிபலித்தது. அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் அரசு, அரச உத்தர வாதப் பிணைகளிலான முதலீடுகளும் முறையே ரூ. 9,260 இலட்சத்தாலும், ரூ. 93,560 இலட்சத்தாலும் உயர்வடைந்தன. வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான முற்பணங்களும் ரூ. 3,580 இலட்சங் கொண்ட அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தன. இதில் குறுகியகாலக் கடன்களின் வளர்ச்சி ரூ. 2,160 இலட்சமாக அமைந்தது. 1988 இல் வங்கி பிரதேச கிராமிய அபிவிரு த்தி வங்கிகளுக்கு ரூ. 200 இலட்சம் கொண்ட தொகையை வழங்கி 1988 முடிவில் ஏனைய நிறுவனங்களுக்கான அதன் பங்களிப்பை ரூ. 2,200 இலட்சத்திற்கு உயர்த்தியது. இதேவேளை வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும், ரூ. 4,510 இலட்சத்தால் உயர்வடைந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தையும் வைப்புக் களையும் உள்ளடக்கிய நாணயப் பொறுப்புக்கள் 1988 இல் ரூ. 106,080 இலட்சத் தால் உயர்வடைந்தன. சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 53,080 இலட்சத் தாலும் வைப்புக்கள் ரூ. 53,000 இலட்சத்தாலும் அதிகரித்தன. அரச, வர்த்தக வங்கிகள், பன்னுட்டு நிறுவனங்கள்/வெளிநாட்டு அரசுகள்/வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள்/ஆகியவற்றின் வைப்புக்கள் முறையே ரூ. 19,600 இலட்சத்தாலும், ரூ. 9,860 இலட்சத்தாலும், ரூ. 33,230 இலட்சத்தாலும் அதிகரித்தன. 1988 இல் பெப்புருவரியிலும் செத்தெம்பரிலும் நியதி ஒதுக்கு விகிதங்களில் செய்யப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களுடன் வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் ரூ. 9,860 இலட்சத்தால் அதிகரித்தன. இதேவேளை இவ்வாண்டில் அரச முகவர்கள், நிறுவனங்கள், ஏனையவை ஆகிவற்றின் வைப்புக்கள் சிறிதளவால் வீழ்ச்சியுற்றன.

நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் மீள் நிதியிடல் இயலளவை உயர்த்தும் நோக்கில் 1988 திசெம்பரில் வங்கியின் பொது ஒதுக்கிலிருந்து ரூபா 6,000 இலட்சம் கொண்ட மாற்றலொன்று செய்யப்பட்டு நிதியத்தின் மொத்த மூலவளங்கள் ரூ. 18,750 இலட்சமாக உயர்த்தப்பட்டன. இவ்வாண்டில், வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ரூ. 2,290 இலட்சத்தால் உயர்வடைந்தன.

நாணயக் கொள்கை

முக்கியமாக உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட மேலதிக வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு 1988 இன் நாணயக் கொள்கையானது பொருளாதாரத்திலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை முக்கியமாகத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மூலமாக ஈர்த்துக்கொள்வதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது. இதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளாவன திறைசேரி உண்டியல் சந்தையில் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தல், திறைசேரி உண்டியல்களுக்காக மீள் கொள்வனவுச் சந்தை ஒன்றினை நிறுவுதல், மத்திய வங்கிப் பிணைகளை வழங்கல், வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குத் தேவையினை மேனோக்கித் திருத்துதல் என்பனவாம்.

முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில், திறைசேரி உண்டியல்களின் வாராந்த வெளியீடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் சந்தை நிலைமைகளுக்கு இசைவாக இயங்குவதற்கு வட்டி வீதங்களை அனுமதிப்பதன் மூலமும் மத்திய வங்கி அல்லாத முதலீட்டாளர்கள் அவற்றின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு ஊக்கமளிக்கப்பட்டனர். திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய் 1988 இன் தொடக்கத்தில் 10.8 சதவீதத்திலிருந்து யூனில் 13.52 ஆக அதிகரித்து ஆண்டு முடிவில் 18.9 சதவீதத்திற்கு மேலும் உயர்வடைந்தது.

திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான புதிய கொள்கை முறையாதெனில் சந்தை நிலைமைகளுக்கு ஏற்பத் திறைசேரி உண்டியல்கள் மீதான இலாப வீதத்தினை அசைய அனுமதிப்பதாகும். இதன் விளைவாக திறைசேரி உண்டியல்கள் பொது மக்களுக்குக் கூடியளவு கவர்ச்சிகரமானதொன்றாக விளங்கின. 1988 இல் இவர்களது முதலீடுகள் கணிசமானளவில் அதிகரித்தன. இது திறைசேரி உண்டியல்களின் புதிய வெளியீடுகளின் அதிகரித்து வரும் அளவுக்கு பங்களிக்க வேண்டிய மத்திய வங்கியின் சுமையினை ஓரளவுக்கு இலகுவாக்கியது. திறைசேரி உண்டியல்களைப் பொது மக்களுக்குக் கவர்ச்சியுள்ளவையாகச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக நடவடிக்கை யாதெனில் திறைசேரி உண்டியல்களை முதிர்ச்சிக் காலத்திற்கு முன்பாகவே கழிவு செய்யும் நோக்குடன் மத்திய வங்கியால் மீள்கொள்வனவு அமைப்பு ஒன்றினைத் திறந்தமையாகும். இந்நடவடிக்கைகளின் நடைமுறைப் படுத்தலைத் தொடர்ந்து மத்திய வங்கி அல்லாத மூலங்களிடமுள்ள திறைசேரி உண்டியல்களின் தொகை 1987 இறுதியின் ரூ. 82,000 இலட்சத்திலிருந்து 1988 இறுதியில் ரூ. 114,000 இலட்சமாக அதிகரித்து, 39 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

இவ்வாறே சந்தை நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கருத்திற்கொண்டு அரச பிணைகளின் வட்டி வீதங்களும் முதிர்ச்சிக் காலங்களும் 1988 இல் உயர்ந்த வட்டி வீதங்களுடன் குறைந்த முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட பிணைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் திருத்தியமைக்கப்பட்ட வேளையில் நீண்டகாலப் பிணைகளை வெளியிடுவது ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீதத்தில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

சுருக்கத்தை ஏற்படுத்துகின்ற நாணயக் கொள்கையை மேலும் வலுப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளின் நியதிச் ஒதுக்குத் தேவைகள் 1988 இன் இரு சந்தர்ப்பங்களில் உயர்த்தப்பட்டன. முதலில் 1988 பெப்புருவரியில் நியதி ஒதுக்கு விகிதம் 3 சதவீதப் புள்ளிகளால் 13 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. இது 1988 செத்தெம்பரில் 2 சதவீதப் புள்ளிகளால் 15 சதவீதத்திற்கு மேலும் உயர்த்தப்பட்டது. எனினும் இரு சந்தர்ப்பங்களிலும் வர்த்தக வங்கிகள் உயர்ந்த இடையீட்டாளர் செலவுகளை நிரப்புவதற்கு இவ்வதிகரிப்புக்கள் இலங்கை அரச திறைசேரி உண்டியல்களின் வடிவில் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. 1988 பெப்புரிவரியில் ஒதுக்கு விகிதங்களில் செய்யப்பட்ட திருத்தத்தோடு, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் வெளியிடப்பட்ட வர்த்தக வங்கிகள் வசமுள்ள பிணைகளின் வடிவில் பேணப்படக்கூடிய ஒதுக்குகளின் அளவு தவணை சேமிப்பு வைப்புக்களைப் பொறுத்தளவில் தேவைப்பட்ட ஒதுக்கில் எட்டில் ஒரு பங்கிலிருந்து பத்தில் ஒரு பங்கிற்குக் குறைக்கப்பட்டது.

பொருளாதார அமைப்பிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை ஈர்ப்பதற்காக 1988 மாச்சில் மத்திய வங்கி அதன் சொந்தப் பிணைகளை வெளியிடுவதை மீளத் தொடங்கியது. அவ்வகைப் பிணைகள் மீதான நிர்ணயிக்கப்பட்ட வீதம் 1988 இன் முதலரைப் பகுதியில் 11 சதவீதமாகமாருதிருந்தது. ஆனல் வருவாய் சந்தை நிலைமைகளைப் பொறுத்து இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. அதன்படி இப்பிணைகள் மீதான வருவாய் 1987 இன் 12.5 சதவீதத்திலிருந்து 1988 இன் முதலரைப்பகுதியில் 14 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளை முதிர்ச்சிக்காலம் ஒரு ஆண்டிலிருந்து ஆறு மாதங்களுக்குக் குறைக்கப்பட்டது. செத்தெம்பரில் நிர்ணயிக்கப்பட்ட வீதம் 14 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டதோடு இது வருவாயை ஆண்டுக்கு 16.2 சதவீதமாக உயர்த்தியது. மத்திய வங்கிப் பிணைகளின் வெளிநிற்கும் தொகை 1987 இறுதியின் ரூ. 200 இலட்சத்திலிருந்து 1988 யூனில் ரூ. 5,130 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. எனினும் இதன் பிறகு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் முக்கியத்துவம் திறைசேரி உண்டியல்களின் மீதே செறிந்துள்ளதால் அவ்வகைப் பிணைகளின் வெளிநிற்கும் அளவு படிப்படியாக வீழ்ச்சியுற்றது.

நாணய நிலைமைகள் அவ்வாறு வேண்டி நின்றாலும் நிவாரணத்திற்கான அவசர தேவைகளை ஈடுசெய்வதற்காகக் கட்டுப்பாடான நாணயக் கொள்கை வழிமுறை 1988 இல் மூன்று சந்தர்ப்பங்களில் தளர்த்தப்படவேண்டியிருந்தது. முதலாவது நலிவுற்ற நிலையிலுள்ள சில நிதிக் கூட்டு நிலையங்கள் அவற்றின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைப் பேணுவதற்கும் நம்பிக்கையை மீளப் பெறுவதற்கும் மீள நிதியிடல் வசதியளிக்கப்பட வேண்டியனவாகவிருந்தன. இம் மீள் நிதியிடல் வசதி 12 சதவீத ஆண்டு வட்டி வீதத்தில் அதிகூடிய 7 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தையுடையதாக வர்த்தக வங்கிகள் மூலமாகக் கிடைக்கச் செய்யப்பட்டது. மேலும், கொடுகடன் நிறுவனங்கள் ஆண்டுக்கு 3 சதவீதத்தை விஞ்சாத இலாப எல்லையொன்றைப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டன. 1988

இறுதியில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடலின் வெளிநிற்கும் தொகை ரூ. 820 இலட்சமாக விளங்கியது. மேலும், 1988 இன் இறுதிக் காலாண்டில் உள்ளூர்க் குழப்பங்கள் தீவிரமடைந்த காரணத்தால் கைத்தொழிலாளர்களினாலும் ஏற்றுமதியாளர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு ஆண்டின் பிற்பகுதியில் இரண்டு நிவாரண வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவது இக் குழப்பங்களினால் வர்த்தக வங்கிகள் எதிர்நோக்கிய திரவத்தன்மைப் பிரச்சினைகளின் நோக்கில் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83 (1) (இ) இன் நியதிகளின்படி மத்திய வங்கி பாதிப்படைந்த வங்கிகளுக்கு தற்காலிக கடன் வசதிகளை வழங்கியது. இது இவ்வங்கிகளுக்கு ஆண்டுக்கு 15 சதவீத சிறப்பு வட்டி வீதத்திலான முற்பணங்களின் வடிவில் அமைந்தது. நாணய விரிவாக்கத்தகைக் கட்டுப்படுத்தும் பொதுவான கொள்கை முறையுடன் இவ்வழிமுறை இசைவாக அமைவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையில் தேறிய கடன்பாட்டாளர்களாக விளங்கும் வங்கிகளுக்கும், வங்கியின் ஒதுக்குத் தேவைகளை நிதியிட தேவையான அளவிற்கு மேலதிகமான திறைசேரி உண்டியல்களை ஒரு விடயமாகக் கொண்டிருக்காத வங்கிகளுக்கும் மட்டுமே இது மட்டுப்படுத்தப்பட்டது. இரண்டாவது இறுதிக் காலாண்டில் உள்நாட்டுக் குழப்பங்களினால் கடுமையாகப் பாதிப்படைந்த ஏற்றுமதியாளர்களுக்கு மேலதிக தற்காலிக வசதியொன்று வழங்கப்பட்டது. வர்த்தக வங்கிகளூடாகப் பெறப்பட வேண்டிய இவ்வசதிகளின்படி ஏற்றுமதியாளர்களுக்குக் கப்பற்படுத்தலுக்கு முன்பான முற்பணங்களின் பேரில் வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியால் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் வழமையான 3 மாத காலத்திலிருந்து 5 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. இவ்வசதியானது தொழில் பாதிப்படைந்த காரணத்தினால் அவர்களின் ஏற்றுமதி ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியாதிருந்த ஏற்றுமதியாளர்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இரு வழிமுறைகளும் குறுகியகால வழிமுறைகளாக அமைந்ததுடன் 1989 சனவரி இறுதியில் முடிவடையுமென எதிர்பார்க்கப்பட்டன.

கொடுகடன் தொழிற்பாடுகளுக்கான ஒரு வழிகாட்டியாகத் தொடர்ந்து எட்டாவது ஆண்டாக 1988 இற்கான தேசிய கொடுகடன் திட்டம் தயாரிக்கப்பட்டது. இவ்வாண்டின் திட்டமானது வர்த்தக வங்கிகளாலும் நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்களினாலும் தனியார் துறைக்கான கடன் வழங்கலை உள்ளடக்கியிருந்தது. நாட்டில் குறிப்பாக ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிலவிய சீரற்ற நிலைமை காரணமாகக் கொடுகடன் திட்டத்தின் முன்னேற்றத்தினைக் கண்காணிப்பது கடினமானதாகக் காணப்பட்டபோதும் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுகடன் ஒதுக்குகள் வர்த்தக வங்கிகளுக்குப் பொருளாதாரத்தில் வேறுபட்ட துறைகளுக்கு வங்கிக் கொடுகடனை வழங்கும்போது பயன்மிக்க வழிகாட்டலை வழங்கியது.